இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

முன்-பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்

முதலாம் அரையாண்டு இறுதிப்பரீட்சை - 2006/2007

ESC 1123/ESC 1134 – மொழித்திறன் விருத்தி

காலம்: இரண்டு(02) மணித்தியாலங்கள்

087

திகதி: 22.10.2006 நேரம்: மு.ப 10.00 - பி.ப 12.00

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

## பகுதி I

01. (அ) 3 - 5 வயதிற்கு இடைப்பட்ட பிள்ளைகளிடம் உன்னிப்பாகக் கேட்கும் திறன்களை மேம்படுத்துவதனால் ஏற்படும் இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(ஆ) அவதானித்துக் கேட்கும் திறன்களை மேம்படுத்துவதற்கு உங்களால் திட்டமிடப்பட்ட இரண்டு வகுப்பறைச் செயற்பாடுகளை விவரிக்க.

(இ) மேற் குறிப்பிட்ட செயற்பாடுகளுள் ஒன்றைத் தெரிவு செய்து பிள்ளைகளுடன் அதனை எவ்வாறு பரிசோதனை செய்து பார்ப்பீர்களென படிப்படியாக விபரிக்க.

02. (அ) பின்வரும் தலைப்புகளில் மூன்றினைத் தெரிவு செய்து இவற்றின் ஊடாக முன்பள்ளிப் பிள்ளைகளின் பேச்சும் மொழிவளமும் எவ்வாறு விருத்தி செய்யப்படலாம் என விளக்குக.

- பிள்ளைகட்கான கவிதைகளும் பாடல்களும்
- சுயாதீனப் பேச்சு
- படங்களைக் கொண்ட அட்டைகள்
- பிள்ளைகட்கான நாடகம்
- விளையாட்டுக் கடை

(ஆ) சரியான பேச்சு விருத்தி இன்மைக் குறைபாட்டினால் பிள்ளையின் சமூகவிருத்திக்கேற்படும் தடைகள் எவை?

03. (அ) முன்வாசிப்புத்திறன்கள் என்றால் என்ன என விளக்குக.

(ஆ) இத்திறன்களை விருத்தி செய்வதற்காகப் பிள்ளைகளிடம் நீங்கள் ஒழுங்கமைக்கும் நான்கு செயற்பாடுகளை விளக்குக. உங்கள் விளக்கத்திற்கு ஆதாரமாக பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்கள் தருக.

## பகுதி II

04. கீழே தரப்பட்டுள்ள மூன்று தலைப்புக்களைத் தெரிவு செய்து 4 - 5 வயதிற்கிடைப்பட்ட பிள்ளைகளின் முன் வாசிப்புத்திறன்களை மேம்படுத்துவதில் இவை ஒவ்வொன்றும் எவ்வாறு பயனுள்ளவையாக இருக்குமென்பதை விளக்குக - பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்கள் தருக.

(1) கட்புல வேறுபாட்டுத்திறன்கள்
(2) செவிப்புல வேறுபாட்டுத் திறன்கள்
(3) விடுகதைகள்
(4) எளிமையான பணிப்புரைகளைப் பின்பற்றல்

05. கீழே தரப்பட்டுள்ள நான்கு விடயங்களையும் வாசியுங்கள்

(1) எளிமையான ஜிக்சோ புதிர்கள்(Jigsow puzzles)
(2) கிறுக்கல்கள்
(3) களிமண்
(4) நூலில் கோர்த்தல்

இவை ஒவ்வொன்றையும் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட செயற்பாடுகள் பிள்ளைகளிடையே எழுதல் திறன்களை விருத்தி செய்வதில் எவ்வாறு உதவும் என்பதை விளக்குக.

06. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் <u>இரண்டு</u> பற்றி விளக்கக் குறிப்புகள் எழுதுக.

தலைப்பு - (1) பிள்ளைகளின் மொழி விருத்தியில் பின்வரும் காரணிகளின் செல்வாக்கு.

(i) விளையாட்டும் செயற்பாடுகளும்
(ii) வீட்டுப் பின்னணி
(iii) உடல் விருத்தி

தலைப்பு - (2) பிள்ளைகளின் எழுதல் திறன்கள் விருத்தியில் பின்வரும் காரணிகளின் முக்கியத்துவம்.

(i) கண்-கை இணைப்பு
(ii) வெவ்வேறு கோலங்களை நினைவுபடுத்தல்

தலைப்பு - (3) பிள்ளைகளிடம் கேட்டல் திறன்களை விருத்தி செய்வதற்கு வகுப்பிற்கு வெளியே பயன்படுத்தக்கூடிய மூன்று செயற்பாடுகளின் பெயர்களைத் தருக.

இச்செயற்பாடுகளைப் பிள்ளைகளுடன் எவ்வாறு பரிசோதனை செய்து பார்ப்பீர்கள் என விபரிக்க.

(பதிப்புரிமை பெற்றது)